ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2135/38 - 2019 අගෝස්තු මස 06 වැනි අඟහරුවාදා - 2019.08.06

*2135/38 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

**கண்டி மாநகர சபை பொழுதுபோக்கு வரியினை அறவிடல்**

(267 ஆவது அத்தியாயமான) பொழுதுபோக்கு வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது துணைப் பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி கண்டி மாநகர சபையின் 2018.12.20 ஆந் திகதி நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் தீர்மான இல. 8(23) இன் கீழ் தீர்மானிக்கப்பட்ட கீழ்வரும் தீர்மானம் மேற்குறிப்பிட்ட பொழுதுபோக்கு வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது துணைப் பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் அனுமதிக்கப்பட்டதாக அதன் துணைப் பிரிவின் பிரகாரம் இத்தால் வெளியிடப்படுகிறது.

மைத்திரி குணரத்ன,
ஆளுநர்,
மத்திய மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
2019, ஏப்பிறல் 22.

**தீர்மானம்**

1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பொழுதுபோக்கு கட்டளைச் சட்டத்தின் இல. (2) 1 ஆம் பிரிவின்படி மற்றும் 1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க பொழுது போக்கு திருத்தச் சட்டத்தின்படி கண்டி மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் பொழுதுபோக்கு வரியினை அறவிடுவதற்காக ஒவ்வொரு மெஜிக் கண்காட்சி, சர்கஸ் கண்காட்சி, குதிரைப் பந்தயம் மற்றும் சங்கீத விழா, கண்காட்சி விளையாட்டுப் போட்டி, விழாக்கள் அல்லது வேறு கொண்டாட்டங்கள் மற்றும் பிரசங்கங்கள் என்பவை உள்ளிட்ட பணம் அறவிடப்படும் ஒவ்வொரு விடயத்திற்காகவும் உள்நுழையும் நுழைவுச் சீட்டின் பெறுமதியின் நூற்றுக்கு 20% பொழுதுபோக்கு வரியாகவும் திரையரங்குகளில் காண்பிக்கப்படும் திரைப்பட விழாக்களுக்காக மட்டும் நுழைவுச் சீட்டின் பெறுமதியில் 7.5 % பொழுதுபோக்கு வரியாகவும் அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றேன்.

8 - 797

1A - PG 4608 — 17 (2019/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.